1981 ஏப்ரல் 4]

தமிழகத்தில் மர நடு விழா.

*வினா எண். 635—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மரநடு விழா பெருமளவில் கொண்டாட அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம். விவரங்கள்* அவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. புருஷோத்தமன் : இந்த மரம் நடும் திட்டம் மறைந்த சஞ்சய் காந்தியின் ஐந்து அம்சத் திட்டத்தில் உள்ள ஒன்று. நம் நாட்டில் மரம் நடும் விழாவை விரிவாக அமல்படுத்த வேண்டி இந்தத் திட்டத்தை பரவலாக நாடு முழுவதும் அமலாக்க ஒரு விழா ஏற்பாடு செய்து அதற்கு நமது பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களையும், உள்துறை அமைச்சர் திரு. ஜெயில்சிங் அவர்களையும் கொண்டு வந்து விழா நடத்த ஏற்பாடு செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த மரநடு விழா அல்லது இந்தக் கருத்து பதினைந்து ஆண்டுகளாகவே இந்தியத் துணைக் கண்டத்தில் நாம் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை விடையிலேயே தெரிவித்திருக்கின்றேன். சஞ்சய் காந்தி அவர்கள் அதில் தீவிர ஆர்வம் காட்டினார்கள் என்பதுதான் உண்மை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களையும், உள்துறை அமைச்சர் அவர்களையும் வரவழைத்து விழா நடத்த வேண்டும் என்பதில் அக்கறை காட்டுகிறார். இல்லை மரம் நடுகின்ற அந்த நிகழ்ச்சிகளில் அக்கறை காட்டவேண்டும் என்று விரும்புகிறாரா என்று தெரியவில்லை. பொதுவாக பாரதப் பிரதமர் அவர்கள் மரம் நடுகிற நிகழ்ச்சிகளில் அக்கறை காட்டி குடும்பத்திற்கு ஒரு மரம் என்ற அந்தத் திட்டத்தை நாடு முழுவதும் அமல்படுத்தவேண்டுமென்று தெரிவித்திருக்கின்றார்கள். அதில்தான் இந்த அரசு வனத்துறை கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றது.

திரு. து. புருஷோத்தமன் : பாரதப் பிரதமரை அழைத்து வந்து விழா நடத்த வேண்டும் என்பது மரங்கள் நடவேண்டும் என்ற நல்ல நோக்கத்தில்தான் சொல்கிறேன். ஆகவே, எல்லோருடைய கவனத்தை ஈர்க்கும் விதத்தில் பாரதப் பிரதமர் அவர்களை வரவழைத்து, அதே போல் உள்துறை அமைச்சர் திரு. ஜெயில்சிங் அவர்களையும் வரவழைத்து விழாவிற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

---

* 126 ம் பக்கத்தில் இணைப்பு 8 அச்சிடப்பெற்றுள்ளது.

அதே போல் ஒருவருக்கு ஒரு மரம் என்ற வகையில் திட்டம் வகுத்து எந்த அளவிற்கு இதுவரை நம் அரசு செயல்பட்டிருக்கின்றது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் இங்கே விவரங்களைத் தெளிவாக அவையிலே வைத்திருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் வந்திருக்கின்றார்கள் என்று எண்ணுகின்றேன். அந்த விடை அநேகமாக 3, 4 பக்கங்களில் இருக்கிறது. அதை ஓய்வாக இருக்கின்றபோது படித்துப் பார்த்தால், எல்லா விவரங்களும் அவருக்குக் கிடைக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு மத்திய உணவுத் துறை அமைச்சராக இருந்த திரு. கே. எம். முன்ஷி அவர்களால் கொண்டுவரப்பட்ட மரம் நடு விழா, தற்போது பருவ மழை தவறியதன் காரணமாக, அதைத் தீவிரப்படுத்துவதற்கு வனத் துறையின் மூலமாக பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மரங்கள், நாற்றுக்கள் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாற்றுக்களை உருவாக்கி, அதை வழங்குகின்ற வியாபாரம் லாப அடிப்படையில் நடத்தப்படுவது இல்லை. குறைந்த விலையில் இப்போது வழங்கப்பட்டு வருகிறது.

திரு. ந. சிவஞானம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வறட்சி நிலவுகின்ற நேரத்தில், தற்போதுள்ள மரங்களை அங்கேயிருக்கின்ற மக்கள் வெட்டுகிறார்கள். அதற்குத் தடை விதிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மரங்களை வெட்டுகிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. அதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு எல்லா இடங்களிலும் போய்த் தடுப்பதைவிட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு உதவி செய்யும் வகையில், மக்களுக்கு எடுத்துச் சொல்லி, இருக்கின்ற மரங்களை வெட்டி விடாதீர்கள், வெட்டினால் பெய்கின்ற மழைகூட பெய்யாமல் போய்விடும் என்கின்ற விவரத்தை எடுத்துச் சொல்லுகின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் மரம் நடு விழாவிற்காக அரசு எல்லா ஏற்பாடுகளையும், முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறது. அதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்

1981 ஏப்ரல் 4]

திலே மதுரை மாவட்டத்தில், கொடைக்கானல் பகுதியிலே ஏராளமான மரங்கள் பெரிய அளவில் வெட்டப்படுகின்றன. முறையற்ற முறையிலும் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். கொடைக்கானலுக்கு அழகு தந்துகொண்டிருக்கின்ற பேரிஜம் ஏரியைச் சுற்றி இருந்த ஆயிரக்கணக்கான மரங்களை வெட்டிவிட்டு, அதனால் அந்த ஏரியே அழிந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கின்றது. இதுபோன்ற சமூக விரோதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும், மரங்களை அனுமதியில்லாமல் வெட்ட முற்படுகின்றவர்கள் மீதும் அரசு இதுவரை என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற மரங்களை அனுமதியில்லாமல் வெட்டுகின்றவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு விரும்பி, அதற்காகச் சில சட்டத் திருத்தங்களை செய்து, வனத்துறை அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவை பிறப்பித்துக் கொண்டிருக்கிறது. அவ்வப்போது கிடைக்கக்கூடிய தகவல்களின்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். என்றாலும், இப்படிப்பட்ட புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. '' கள்வன் பெரிதா, காப்போன் பெரிதா '' என்ற ஒரு பழமொழி இருக்கிறது. அதிலும் குறிப்பாக வனத் துறையைப் பொறுத்தவரை இது காவல் இல்லாத, வேலி இல்லாத வனத்துறையாக இருக்கின்ற காரணத்தினால், பல்லாயிரக்கணக்கான ஏக்கர்களுக்கு ஒருவர் இருவர் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருக்கிறார்கள். இந்த நிலையிலே இதிலே சமுதாய விரோதிகள் என்கிற பெயராலே சிலர் ஈடுபட்டு மரங்களை வெட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அரசு கடுமையான முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பாக ஏதாவது தகவல் அவரிடத்திலே இருந்து தருவார்களேயானால், அதை விசாரித்து தடுப்பதற்கும் வசதியாக இருக்குமென்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

வடமதுரை அருள்மிகு சௌந்திரராசப் பெருமாள் கோயில்.

*வினா எண். 636—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் வட்டம் வடமதுரை அருள்மிகு சௌந்திரராசப் பெருமாள் திருக்கோயிலின் முன் மண்டபம் கட்டும் பணி நீண்ட நாட்களாக காலதாமதம் ஆகக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மதுரை மாவட்டம், வேடசந்தூர் வட்டம், வடமதுரை அருள்மிகு சௌந்திரராசப் பெருமாள் ஆலயத்தின் முன் மண்டபம் கட்டும் பணி மேற்படி